## நீர் நிலைகளின் தகவல் – கண்காணிப்பு – பாதுகாப்பு அமைப்பின் இணையதளத்தைத் தொடங்கி வைத்தார்!

# நீர்வளத்துறையில் உதவிப் பொறியாளர் 169 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை, 4-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.7.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நீர்வளத்துறையில் உதவிப் பொறியாளர் (சிவில்) பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 169 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். மேலும், நீர்வளத்துறை சார்பில் நபார்டு ஆலோசனை சேவைகள் (NABARD Consultancy Services) மற்றும் வசார் லேப்ஸ் நிறுவனம் (VASSAR Labs) மூலம் வடிவமைக்கப்பட்ட 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பின் இணையதள சேவையையும், 3 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு செயற்கைக் கோள் அடிப்படையிலான நீர்நிலைகளின் தகவல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பின் இணையதள சேவையையும் தொடங்கி வைத்தார்.

**உதவிப் பொறியாளர் (சிவில்) பணி நியமன ஆணைகள் வழங்குதல்!**

ஒருங்கிணைந்த பொறியியல் பணிகளுக்கான தேர்வின் மூலம் உதவிப் பொறியாளர் (சிவில்) பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டு, நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 169 உதவி பொறியாளர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இது நாள் வரை 374 நபர்களுக்கு உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

**நீர்வளத்துறையின் இணைய தளங்கள் தொடங்கி வைத்தல்!**

இந்தியாவிலேயே முதன்முறையாக மாநிலத்திலுள்ள அனைத்து ஆற்றுப் படுகைகளிலும் நீர் வரத்து முன்னறிவிப்பு மாதிரியை தானியங்கி முறையில் உருவாக்கியது, அனைத்து தரப்பு நீர் தேவைகளை அறிதல், மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்களுக்கும் ஒருங்கிணைந்த நீர்த்தேக்க செயல்பாடு ஏற்படுத்தியமை மற்றும் குறிப்பிட்ட இடம் சார்ந்த நீர் சம்மந்தமான விவரங்களை வழங்க புவிநுண்ணறிவு கைபேசி பயன்படுத்துதல் ஆகிய அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு (TNWRIMS)**

தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பானது நீர்வளத்துடன் தொடர்புடைய அனைத்து தரவுகளையும் ஒரே கட்டமைப்பில் ஒருங்கிணைத்து நிர்வகிக்கும் அதிகாரப்பூர்வ தீர்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு, நீர் விநியோகம், தேவை வாய்கள், சிறுபாசன ஏரிகள் போன்றவைகளின் நேரடி கண்காணிப்பு மற்றும் முடிவெடுத்தல் ஆதரவைக் கையாளும் திறன் கொண்டதாகும்.

TNWRIMSன் செயல்திட்ட பணிகள் 26.10.2022 அன்று தொடங்கப்பட்டது. மத்திய நீர் வள ஆணையம் (CWC), இந்திய வானிலை மையம் (IMD), இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (ISRO), மாநில மற்றும் உலகளாவிய தரவுகள் (State and Global Data) ஆகியவற்றிலிருந்து தரவுகளை ஒருங்கிணைத்து, நிகழ்நேரத் தகவலைக் கொண்டு, இந்த ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பு (Real time Dashboards modules) செயல்படும்.

**நீர் பாதுகாப்புத்திட்டம்!**

நிகழ்நேரத் தகவலை அளித்திடும் இந்த அமைப்பில் நீர் வழங்கல், தேவை, தரம், பயனர்கள் போன்றவை, நீர் தணிக்கை, கிராம நீர் பற்றாக்குறை தகவல், நிலத்தடி நீர் தகவல், திட்ட கண்காணிப்பு மற்றும் மேலாண்மை, ஆற்றுப்படுகைகளுக்கிடையே நீர் பரிமாற்றம், நீர் பாதுகாப்பு திட்டம் போன்ற 11 தொகுதிகள் உள்ளன. இந்த இணையதள பதிவு மற்றும் தரவுகள் இடம் பெயர்வுக்கான பணிகள், தமிழக அரசு நீர்வளத்துறை இணையதளத்தில் (http://tnwrims.tn.gov.in) இணைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு செயற்கைக்கோள் அடிப்படையிலான நீர்நிலைகளின் தகவல், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பு (Tamil Nadu Satellite based Water Bodies Information Monitoring and Protection System).**

செயற்கை நுண்ணறிவு மற்றும் செயற்கைக்கோள் மூலம் புதிய தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்பு மற்றும் நீரின் தரத்தை கண்காணிக்க இணையதளம் உருவாக்குவதற்காக 3 கோடியே 55 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நீண்டகால, எளிதாகக் கிடைக்கும் செயற்கைக்கோள் தரவுகளைப் பயன்படுத்தி, வருவாய்த் துறை ஆவணங்களில் வரையறுக்கப்பட்ட நீர்நிலைப்பகுதியின் அளவீடு மூலம் நீர்நிலைகளில் ஏற்படும் ஆக்கிரமிப்பு / அத்துமீறல் போன்றவை செயற்கை நுண்ணறிவு வழிமுறைகளைப் பயன்படுத்தி கண்டறிந்திடலாம்.

இத்தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி, பரப்பளவில் ஏற்படும் மாற்றங்களால் நீர்நிலைகளின் கொள்ளளவு இழப்பை கண்டறியலாம், நீர்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து துறை சார்ந்த அதிகாரிகளுக்கு நீர்நிலைகளில் உள்ள புல எண்களில் ஏற்படும் மாற்றம் குறித்த விழிப்பூட்டல் தகவல்களை அனுப்பி, ஆக்கிரமிப்பை அகற்றும் பணியை செயல்படுத்தும் முன்னோடி திட்டமாக, அம்பத்தூர் ஏரியில் ஆக்கிரமிப்புகளை கண்டறியும் வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது.

**ஏரிகளின் நீர் அளவு தொடர்ந்து கண்காணிப்பு!**

செம்பரம்பாக்கம் ஏரியில் உள்ள நீரின் தரத்தை நிகழ்நேரத்தில் கண்காணிக்க உணரி (Sensor) நிறுவப்பட்டு நீரின் தரம், குறிப்பிட்ட அளவுகள் மற்றும் மதிப்புகள் இணையதளத்தில் (http://tnswip.tn.gov.in) நிகழ்நேரத்தில் தெரிவிக்கப்படுகின்றது.

பூண்டி நீர்த்தேக்கத்தில் வண்டல் மண் படிவு கணக்கீட்டுக்காக பேத்மெட்ரிக் மற்றும் ஆளில்லா விமானம் மூலம் தரவுகள் பெறப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், நீர்வளத்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), ச. ரமேஷ், நீராய்வு நிறுவனம் நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு பிரிவின் தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர் பு. சுந்தரராஜன், நபார்டு தலைமைப் பொது மேலாளர் ர. ஆனந்த், TNWRIMS & TNSWIP திட்ட ஒருங்கிணைப்பாளர் கோ. சுப்புராஜ், வசார் லேப்ஸ் முதன்மை செயல் அலுவலர் நிகிலேஷ் குமார். மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.7.2025) தலைமைச் செயலகத்தில், ஒருங்கிணைந்த பொறியியல் பணிகளுக்கான தேர்வின் மூலம் உதவிப் பொறியாளர் (சிவில்) பதவிக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டு, நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 169 உதவி பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், நீர்வளத்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), ச. ரமேஷ், நீராய்வு நிறுவனம் நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாட்டு பிரிவின் தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர் பு. சுந்தரராஜன், நபார்டு தலைமைப் பொது மேலாளர் ர. ஆனந்த், TNWRIMS & TNSWIP திட்ட ஒருங்கிணைப்பாளர் கோ. சுப்புராஜ், வசார் லேப்ஸ் முதன்மை செயல் அலுவலர் நிகிலேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வேலூர் சென்றிருந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகியை அவரது இல்லத்தில் சந்தித்து, அவரது சகோதரர் – முன்னாள் துணை மேயர் தி.அ.முகமது சாதிக் சாலை விபத்தில் இறந்தது தொடர்பாக ஆறுதல் தெரிவித்தார். உடன் மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. மற்றும் மறைந்த முகமது சாதிக் குடும்பத்தினர் உள்ளனர்.

### கீழடி அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகள், தமிழர் நாகரிகத்தின் தொன்மையை, வட இந்தியாவிலும் பரவச் செய்துள்ளன!

# வேத நாகரிகத்தை விட கீழடி நாகரிகம் தொன்மையானது!

### சமூக வலைதளத்தில் - மனிஷ் சிங் வெளியிட்டுள்ள பதிவு!

**சென்னை, ஜூலை. 4-**

**கீழடி அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகள், தமிழர் நாகரிகத்தின் தொன்மையை வட இந்தியாவிலும் பரவச் செய்துள்ளன. இது குறித்து மனிஷ்சிங் என்பவர் வெளியிட்டுள்ள குறிப்பில், வேத நாகரிகத்தை விட கீழடி வெளிப்படுத்தி உள்ள நாகரிகம் தொன்மையானது எனத் தெரிவித்துள்ளார்.**

"அகழாய்வுகளின் அரசியல், இந்திய மண்ணுக்குள் புதைக்கப்பட்ட உண்மைகள் எனும் தலைப்பில் மனிஷ் சிங் தனது சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ஒரு காலத்தில், இந்தியாவின் வரலாறு வேதங்களுடன் தொடங்கியதாகவும், நமது நாகரிகம் கங்கையின் மடியில் செழித்து வளர்ந்ததாகவும் நம்பப்பட்டது என்றும் ஆரியர்களும் பிராமணர்களும் இக்கருத்தை பரப்பி வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர். சர் ஜான் மார்ஷல் தலைமையில் நடைபெற்ற அகழாய்வுகளின் முடிவில் வெளியான சிந்து சமவெளி நாகரிகம், வேத நாகரிகம் குறித்த பொய்யான கோட்பாடுகளை தகர்த்துவிட்டதாகவும், வேத யுகத்திற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய மண்ணில் முழுமையாக வளர்ந்த நகர்ப்புற நாகரிகம் இருந்ததும், அங்கு வாழ்ந்த மக்கள் ஆரியர்கள் அல்ல என்பதும் உறுதி செய்யப்பட்டதால், ஆரியர்கள் வெளியில் இருந்து வந்தவர்கள் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா பிளவுபட்டபோது, நமது நாகரிகத்தின் உண்மையான பிறப்பிடம் பாகிஸ்தானுக்குச் சென்று விட்டது என்றும், இது கலாச்சார தேசியவாதத்திற்கு ஏற்பட்ட பேரிடி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

70 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் எழ முயற்சிக்கும் கலாச்சார தேசியவாதம், வட இந்தியாவே இந்திய நாகரிகத்தின் தொட்டில் என பிரச்சாரம் செய்யும் நேரத்தில், மதுரை அருகே, 2016 ஆம் ஆண்டு கீழடி எனும் இடத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில், தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள், மணிகள், வர்ணம் பூசப்பட்ட மட்பாண்டங்கள், குழாய்கள், வடிகால் அமைப்புகள் மற்றும் நீர் சுத்திகரிப்பு அமைப்புகள் உள்ளிட்ட கட்டமைப்புகளின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையும், இரும்பு மற்றும் வெண்கலத்திற்கான உருக்கு ஆலைகள் இருந்ததற்கான தடயங்களும் கிடைத்ததையும் சுட்டிக் காட்டி உள்ள கட்டுரையாளர்,

இது ஒரு தொழில் பெருநகரமாக இருந்திருக்கலாம் என்றும் அங்கிருந்த எழுத்து வடிவங்கள் சிந்து சமவெளி எழுத்தை ஒத்திருந்ததாகவும், வட இந்தியாவைவிட தென்னிந்தியாவில் பழமையான ஒரு நாகரிகம் இருந்தது உறுதி என்றும் தெரிவித்துள்ளார்.

இந்திய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியதைக் கொண்டாடுவதற்கு பதிலாக ஆய்வுக்கான நிதியை ஒன்றிய அரசு குறைத்ததுடன், அகழாய்வுகளின் தலைமை அதிகாரியை மாற்றிவிட்டு, ஆய்வறிக்கையை திரும்பப் பெறுமாறு அவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும், பின்னர் வந்த அதிகாரி முக்கியத்துவம் வாய்ந்த எதுவும் கிடைக்கவில்லை என்று கூறி ஒரு அறிக்கையை விரைவாகத் தாக்கல் செய்ததாகவும், அதனைத் தொடர்ந்து அகழாய்வு நிறுத்தப்பட்டதாகவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.

பின்னர், நீதிமன்றத்தின் தலையீட்டைத் தொடர்ந்து அகழாய்வுப் பணிகளை தமிழ்நாடு அரசே தொடர்ந்ததாகவும், இதன் விளைவாக

இலக்கியங்கள் மூலம் மட்டுமே அறியப்பட்ட சங்க காலம், தற்போது தொல்பொருள் சான்றுகளுடன் உறுதியாகி விட்டதாகவும், வட இந்தியாவுடன் தொடர்பில்லாத ஒரு பண்டைய திராவிடக் கலாச்சாரம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கீழடி அகழாய்வுகளில் ஒன்றிய அரசின் தலையீடு, ஆரிய நாகரிகம் உயர்ந்தது என்ற கட்டுக்கதையைப் பாதுகாப்பதையும், தென்னிந்தியாவை குறைமதிப்பீடு செய்வதையும் நோக்கமாகக் கொண்டதாகவே உள்ளதுஎன்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது, உத்தரப்பிரதேசத்தில் சரஸ்வதி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கூறுவது கீழடி அகழாய்வுகளை சிறுமைப்படுத்தும் நோக்கம் கொண்டவை என்றும், ஒன்றிய அரசின் பல நிறுவனங்களைப் போலவே, இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனமும் அரசியல் மயமாகி விட்டதாகவும் மனிஷ் சிங், தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

### மண், மானம், மொழியைக் காக்க "ஓரணியில் தமிழ்நாடு"

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, ஜூலை 4-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மண், மானம், மொழியைக் காக்க "ஓரணியில் தமிழ்நாடு"மாபெரும் பொதுக்கூட்டம் 02.07.2025, புதன்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு நாகர்கோவில், செம்மாங்குடி சாலையில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையிலும், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரத்தினம், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.சோமு, ஏ.ஆர். பூதலிங்கம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மேயர் ரெ.மகேஷ் கழக அரசின் நான்காண்டு சாதனைகளை மக்களிடம் வீடு வீடாக கொண்டு சேர்த்தல் பற்றியும், புதிய உறுப்பினர்கள் சேர்க்கையினை பற்றியும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கழக அரசின் வளர்ச்சி பணிகள் குறித்தும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை மூலமாக திருக்கோயில்களுக்கு பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளையும் பட்டியலிட்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், தலைமைக் கழக வழக்கறிஞர் ஏ.என்.லிவிங்ஸ்டன், ஒன்றிய கழக செயலாளர்கள் பா.பாபு, த.செல்வன், அ.லிவிங்ஸ்டன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங்,, நகர கழக செயலாளர்கள் என்.நாகூர்கான், குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் என்.பி.துரை, த.ஜீவா, மு.சேக்மீரான் உட்பட ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA), பாக குழு உறுப்பினர்கள் (BLC), கழக முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

'ஓரணியில் தமிழ்நாடு' கழக உறுப்பினர் சேர்க்கையை, கடலூர் கிழக்கு மாவட்டம்,காட்டுமன்னார்கோயில் வட்டம், முட்டம் கிராமத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தன்னை கழக உறுப்பினராக புதுப்பித்து கொண்டு, தொடங்கி வைத்தார்கள், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், தொகுதி பொறுப்பாளர் விஜயன் ராமகிருஷ்ணன்,ஒன்றிய செயலாளர்கள் அ.முத்துசாமி, டி.ஜெயபாண்டியன்,பேரூர் செயலாளர் ஆர்.கணேசமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி. கார்த்திகேயன், பொதுக் குழு உறுப்பினர் கே.பி.ஆர்..பாலமுருகன், தொகுதி பார்வையாளர்கள் டி.வெங்கடாசலபதி, ஏ.பழனிசாமி, முட்டம் கிளை கழக தலைவர் ஆசிரியர் ஏ.இராமமூர்த்தி, கிளை செயலாளர்கள் தாமோதரன்,பழனிசாமி, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.